# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>

**<u>சாதாரண கூட்டப் பொருள்</u>**

**2022**ம் ஆண்டு டிசம்பர் மாதம் **29**ம் நாள் வியாழக்கிழமை காலை **10.30** மணிக்கு **2008**ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை **1** பிரிவு எண் **3(1)**ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| **29.12.2022** | **1.** தூத்துக்குடி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு நாள் ஒன்றிற்கு **150** துப்புரவு பணியாளர்கள் மற்றும் **7** துப்புரவு மேற்பார்வையாளர்கள் M/s. Ourland Engineering Works Pvt Ltd நிறுவனத்தினர் மூலம் ஆள்வெளிக்கொணர்வு முறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பணியாளர்களுக்கு **2018–2019** நிதியாண்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலக தினக்கூலி விகித பட்டியலின் படி (Schedule of Rate) துப்புரவு பணியாளருக்கு நாள் ஒன்றிக்கு ரூ.**354/–(**ESI, EPF, Ins., Service Charges தவிர்த்து) மற்றும் துப்புரவு மேற்பார்வையாளருக்கு ரூ.**426/–(**ESI, EPF, INS., Service charges தவிர்த்து) என்ற விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்காலம் அனுமதி **31.01.2023** அன்றுடன் முடிவடைகிறது. இந்நிலையில் மேற்படி பணி தொடர்பான முன்மொழிவானது சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி பொருள் தொடர்பாக இறுதி செய்யப்படும் வரை தினக்கூலியானது **2018–2019** நிதியாண்டில் வழங்கப்பட்ட விலை விகிதத்திலேயே **31.03.2023** வரை பணிகளை தொடர்ந்து M/s. Ourland Engineering Works Pvt Ltd வழங்கிடவும் அதற்கான செலவினம் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எச்3/2275/17 | **249)**அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 2. தூத்துக்குடி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு நாளொன்றிற்கு 150 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 8 துப்புரவு மேற்பார்வையாளர்கள் M/s.S.K.Selvi நிறுவனத்தினர் மூலம் ஆள்வெளிக்கொணர்வு முறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பணியாளர்களுக்கு 2020—2021 நிதியாண்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலக தினக்கூலி விகித பட்டியலின் படி (Schedule of Rate) துப்புரவு பணியாளருக்கு நாள் ஒன்றிக்கு ரூ.392/—(ESI, EPF, Ins., Service Charges தவிர்த்து) மற்றும் துப்புரவு மேற்பார்வையாளருக்கு ரூ.472/—(ESI, EPF, INS., Service charges தவிர்த்து) என்ற விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்காலம் அனுமதி 31.01.2023 அன்றுடன் முடிவடைகிறது. இந்நிலையில் மேற்டிபடி பணி தொடர்பான முன்மொழிவானது சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி பொருள் தொடர்பாக இறுதி செய்யப்படும் வரை தினக்கூலியானது 2020—2021 நிதியாண்டில் வழங்கப்பட்ட விலை விகிதத்திலேயே 31.03.2023 வரை பணிகளை தொடர்ந்து வழங்கிடவும் அதற்கான செலவினம் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எச்3/2275/17 | 250)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |
| | 3. தூத்துக்குடி மாநகராட்சி ஆதிபராசக்திநகர் சங்கரப்பேரி சர்வே எண் 189/1 A3, 53050 சதுரமீட்டர் பரப்பளவு இடத்தில் மனுதார் திருமதி.S.ஜெயலெட்சுமி மனைப்பிரிவிற்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு (பொ) மற்றும் உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் ந.க.எண் 365/2022 தூமாஅ—1 எண்.67/2022ல் நாள் 24.06.2022ல் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>வீட்டுவசதி (ம) நகர்புறம் வளர்ச்சித்துறை அரசாணை எண். G.O.(Ms).No.181 நாள்.09.12.2020ல் குறிப்பிட்டுள்ளபடி தொழில் நுட்ப வரைபடத்தின்படி மனைப்பிரிவில் அமையும் சாலை (4 எண்ணம் ) 1412.61 சதுரமீட்டர் பரப்பளவு (34.9 சென்ட்) இடமும், பூங்கா (1 எண்ணம்) 100.362 சதுர மீட்டர் (2.48 சென்ட்) இடமும், உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு 22.188 சதுரமீட்டர் பரப்பளவு (0.548 சென்ட்) இடமும், மின்சார வாரியத்துக்கு ஒதுக்கீடு 22.991 சதுரமீட்டர் பரப்பளவு (0.57 சென்ட்) மாநகராட்சிக்கு தானமாக ஆவணம் எண் 2469/2022 நாள் 09.06.2022ல் தானபத்திரம் மூலம் மாநகராட்சி ஆணையர் பெயரில் | 251)அலுவலகக் குறிப்பு பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மனுதாரரால் பதிவு செய்யப்பட்டு உள்ளூர் திட்ட குழுமத்தின் வழியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்ற பதிவுசெய்யலாம்<br>F1/1753/2022/ வ.ம | |
| | 4. தூத்துக்குடி மாநகராட்சி – மேற்குமண்டலம் கதிர்வேல் நகர் மீளவிட்டான் கிராமம் சர்வே எண் 355/1B2A ல் 1142.906 சதுரமீட்டர் பரப்பளவு இடத்தில் மனுதாரர் திரு.J.அகிலன் மனைப்பிரிவிற்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர ஊரமைப்பு உதவிஇயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர்(பொ) அவர்களின் ந.க.எண் SWP/DTCP/ THOOTHUKUDI 21/2022 நாள்.19.10.2022 ல் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>வீட்டுவசதி(ம) நகர்புறம் வளர்ச்சித்துறை அரசாணை எண் G.O(Ms)NO.181 நாள். 09.12.202ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சாலை 293.13 சதுரமீட்டர் பரப்பளவு இடமும்,, உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு 13.10 சதுரமீட்டர் பரப்பளவு இடமும், மின்சார வாரியத்துக்கு ஒதுக்கீடு 10.08 சதுரமீட்டர் பரப்பளவு இடமும், மாநகராட்சிக்கு தானமாக ஆவணம் எண்4821/2022 நாள் 27.09.2022 ல் தானபத்திரம் மூலம் மாநகராட்சி ஆணையர் பெயரில் மனுதாரரால் பதிவு செய்யப்பட்டு உள்ளூர் திட்டக் குழுமத்தின் வழியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவுசெய்யலாம்.<br>F1/5385/2022/மே.ம | 252)அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப் பட்டது |
| | 5. தூத்துக்குடி மாநகராட்சி – மேற்குமண்டலம் மீளவிட்டான் கிராமம் சர்வே எண் 368/1A2B, 1A2D ல் 1210 சதுரமீட்டர் பரப்பளவு இடத்தில் மனுதாரர் திரு.எம்.விநாயகமூர்த்தி மனைப்பிரிவிற்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர ஊரமைப்பு உதவிஇயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர்(பொ) அவர்களின் ந.க.எண் 478/2020 தூமாஅ–1 நாள்.27.07.2022 ல் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>வீட்டுவசதி(ம) நகர்புறம் வளர்ச்சித்துறை அரசாணை எண் G.O(Ms)NO.181 நாள். 09.12.2020 ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சாலை 307.82 | 253)அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப் பட்டது |

| | | |
|---|---|---|
| | சதுரமீட்டர் பரப்பளவு இடமும், உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு 9 .57 சதுரமீட்டர் பரப்பளவு இடமும், மின்சார வாரியத்துக்கு ஒதுக்கீடு 9.57 சதுரமீட்டர் பரப்பளவு இடமும், மாநகராட்சிக்கு தானமாக ஆவணம் எண்3072/2022 நாள் 19.05.2022 ல் தானபத்திரம் மூலம் மாநகராட்சி ஆணையர் பெயரில் மனுதாரரால் பதிவு செய்யப்பட்டு உள்ளூர் திட்டக் குழுமத்தின் வழியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அ.கு மாமன்றம் பதிவுசெய்யலாம்.<br><br>F1/1332/2022/மே.ம | |
| | 6. தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் நடைபெறும் சீர்மிகு நகர அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வரும் நிலையில் மேற்படி பணிகளை பார்வையிடவும், பணியினை அளவீடு செய்து, செலவின பட்டியல் தயார் செய்ய வேண்டிய பணியாளர்கள் இல்லாததால் இளநிலை பொறியாளர்களுக்கு ஒவ்வொரு நிலையிலும் உதவிட ஏதுவாக, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை 2019– 2020ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நகர்புற வாழ்வாதார மையம் (City livelihood centre) மூலம் 11 தொழில்நுட்ப உதவியாளர்கள் தற்காலிக ஊதிய அடிப்படையில், நடப்பு ஆண்டு மாமன்ற தீர்மான எண் 74, நாள்.27.09.2022ன் படி, 01.04.2022 முதல் 31.03.2022 வரை தொழில்நுட்ப உதவியாளர்கள் 11 நபர்கள் ஈடுப்படுத்திக்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.<br><br>2022 – 2023ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி பட்டயப்படிப்பு (Diploma in Civil Engineering) – ரூ.573/–, பட்டப்படிப்பு (Bachelor of Engineering) – ரூ.755/–, மேற்கண்ட தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரியும் 11 நபர்களுக்கு, 26.10.2022 முதல் வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினத்தொகை ஆண்டிற்கு ரூ.26.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.மேலும், இதுவரையில் வழங்கப்பட்ட மிகை ஊதியத்தினை, தொழில்நுட்ப உதவியாளர் – 5 நபர்களில் ஊதியத்தில் பிடித்தம் செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம். | 254)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

E5/0186/1718

7. தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் திரு. **Sri Devi Construction** என்பவர் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டுள்ளார்கள்.

| SL.NO | NAME | NAME OF WORK | ESTIMAT NO | AMOUNT | |
|---|---|---|---|---|---|
| | | | | EMD | ASD |
| 1. | Sri Devi Construction | Providing of open well arrangement at rajiv nagar 3rd street (ward no 59) | 19/17-18 | 750/- | 750/- |
| 2. | Sri Devi Construction | Providing of open well arrangement at rajiv nagar 7th street (ward no 59) | 20/17-18 | 750/- | - |
| 3. | Sri Devi Construction | providing of borewell &submersible pump set arrangement &destilting of existing well at athimarapatti (wart no 56) | 21/17-18 | 1,250/- | 1,250/- |
| 4. | Sri Devi Construction | construction of toilet at cruzpuram community hall | 27/17-18 | 1,350/- | 1,350/- |
| 5. | Sri Devi Construction | providing ss name board at new colony dever puram junction &balavinayagar kovil street | 82/17-18 | - | 680/- |
| 6. | Sri Devi Construction | constructon of culvert at ss street | 101/17-18 | 500/- | 500/- |
| 7. | Sri Devi Construction | repair and maintenance work at eastzone office building (Aadhar center) | 139/17-18 | 700/- | 700/- |
| 8. | Sri Devi Construction | Auto mobile scrab sculptures (sea angel, sangu,sailing boat ,fish octopus)from fly | 148/17-18 | 4,950/- | 4,950/- |
| 9. | Sri Devi Construction | construction of RCC slab culvert at gopalasam street junction | 159/17-18 | 1,450/- | 1,450/- |
| 10 | Sri Devi Construction | alternation of existing building chlorination plant shed at vallanadu teppam | 183/17-18 | 4,500/- | 4,500/- |
| 11 | Sri Devi Construction | construction of RCC slab culvert at davispuram east main road | 187/17-18 | 1,950/- | 1,950/- |
| 12 | Sri Devi Construction | cleaning and removing the seemaikaruvelam tree inside the seena | 208/17-18 | - | 1,020/- |

255)அலுவலகக் குறிப்பு கூடுதல் வைப்புத் தொகையினைத் திரும்ப வழங்க அனுமதிக்கப் பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | vaana kulam | | | |
| 13 | Sri Devi Construction | Attending main line leak at north zone arewa (ward-1-7) | 270/17-18 | 3,000/- | 3,000/- |
| 14 | Sri Devi Construction | repair and maintenance of public toilet at SS market | 297/17-18 | 2,200/- | 2,200/- |
| 15 | Sri Devi Construction | providing of MS grill and gate and cylinder loading ,unloading point arrangements for chlorination shed at WTPside | 317/17-18 | 4,300/- | 4,300/- |
| 16 | Sri Devi Construction | Repair and maintenance work at muthammal colony community hall | 323/17-18 | 1,750/- | 1,750/- |
| 17 | Sri Devi Construction | Construction of RCC slab culvert at st.George street | 154/18-19 | 1.050/- | 1.050/- |
| 18 | Sri Devi Construction | providing GI pipe post chain link fencing arrangements at Bharathi children park | 13/18-19 | 2,750/- | 2,750/- |
| 19 | Sri Devi Construction | providing fencing arrangement at Bhayalakshmi nagar | 53/18-19 | 3,000/- | 3,000/- |
| 20 | Sri Devi Construction | construction of SWD with culvert at anna nagar 4th street | 123/18-19 | 5,600/- | 5,600/- |
| 21 | Sri Devi Construction | Attending main line leak at north zone area (wart1-7) | 59/18-19 | 3,000/- | 3,000/- |
| 22 | Sri Devi Construction | construction of swd with culvert at anna nagar 5th street | 124/18-19 | 4,100/- | 4,100/- |
| 23 | Sri Devi Construction | construction of SWD with culvert at anna nagar 8th street | 121/18-19 | 2,200/- | 2,200/- |
| | TOTAL AMOUNT | | | **51,100/-** | **52,050/-** |
| | | | | **1,03,150/-** | |

மேற்படி பட்டியலில் கலந்து கொண்டுள்ள பணிகளை செய்து முடித்து நான்கு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்ட காரணத்தினால் அன்னார் செலுத்திய முன்வைப்பு தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது

இந்நிலையில் திரு. **Sri Devi Construction** என்பவர் மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு செலுத்திய முன் வைப்பு தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகை திரும்ப வழங்க கேட்டு விண்ணப்பித்துள்ளார்,

அன்னார் செலுத்திய மேற்படி பட்டியலில் கண்டுள்ள அனைத்து பணிகளுக்கும் செலுத்திய முன் வைப்பு

| | | |
|---|---|---|
| | தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகை ரூ.**1,03,150/-** காலங்கடந்த வைப்பு தொகையாக உள்ளதால் அன்னாருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>திரு. Sri Devi Construction ஒப்பந்ததாரர் என்பவர் பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு முன் வைப்பு தொகை செலுத்தி பணிகளை செய்து முடித்து நான்கு வருடங்க்ள் முடிவடைந்தது என பொறியியல் பிரிவு அறிக்கையை ஏற்று காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் கொண்டு செல்லப்பட்ட முன் வைப்பு தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகை ரூ.**1,03,150/-**திரும்ப வழங்கலாம்.<br><br>இ5/03246/2020 | |
| | 8. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பாண்டுரங்கன் தெருவில், உள்ள மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு போதிய இடமில்லாததால் சத்திரம் தெரு, அம்மா உணவகம் பின்புறம் உள்ள மாநகராட்சி இடத்தில் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. சத்திரம் தெரு, அம்மா உணவகம் கட்டிடத்தின் பின்புறம் உள்ள வளாகத்தில் பழைய பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள கட்டிடங்களை இடித்து, அப்புறப்படுத்தவும், அப்பணிக்கு ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, நடவடிக்கை மேற்கொண்டதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ5/6092 / 2022 | 256)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது |
| | 9. தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட ஆரம்ப சுகாதார மையங்களில் நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் பணியமர்த்தப்பட்டு 8 நகர சுகாதார செவிலியர்கள் மற்றும் ஒரு போட்டோகிராபர் தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறன்றனர்.<br>நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் ஊதியம் வழங்கப்படும் போட்டோகிராபர் ஒருவருக்கு 31.10.2022ல் மாமன்ற அனுமதி முடிவடைந்துள்ளது. மற்றும் 8 நகர சுகாதார செவிலியர்களுக்கு பணிக்கால அனுமதி 30.11.2022ல் முடிவடைந்துள்ளது. எனவே 8 நகர சுகாதார செவிலியர் மற்றும் 1 போட்டோகிராபருக்கும் 25.03.2022 | 257)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | வரை தற்காலிகமாக பணியிமர்த்துவதற்கும் அவர்களுக்கான ஊதியம் தொகை ரூ.5.00 இலட்சம் நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>நகர்ப்புற வாழ்வாதார மையம் (CLC) மூலம் 8 நகர சுகாதார செவிலியர்கள் மற்றும் 1 போட்டோகிராபருக்கும் 25.03.2022 வரை தற்காலிகமாக பணிமயர்த்திக் கொள்ளவும், அதற்காகும் உத்தேச செவினத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்1/296/2018 | |
| | 10 . தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் அபிவிருத்தி, குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு செய்தல் பணிகள், பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மற்றும் இயற்கை இடர்பாடுகள் காரணமாக சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணியினை12 சிப்பங்களாக, ரூ.2035.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2022–2023–ன் கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். 28771/2022/SS1 நாள் 05.12.2022–ன் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி பெறப்பட்ட விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுலவக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>இ1/5407/2022 | 258)அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது |
| | 11. இம்மாநகராட்சியில் புதிய வாங்கப்பட்ட போலீரோ ஜீப் வாகனம், துணை மேயர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்தை இயக்குவதற்கு, நிரந்தர வாகன ஒட்டுநர் இல்லாத காரணத்தினால், நகர்புற வாழ்வாதார மையம் மூலம் (CLC) Light duty Driver ஒருவரை, 2022–23ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி, நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.521/–வீதம், 21.12.2022 முதல் ஓராண்டுக்கு, மேற்கண்ட துணை மேயர் அவர்களின் வாகனத்தை இயக்குவதற்கு ஓட்டுநர் 1 நபர் பணியில் ஈடுபடுத்திக்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.1.90இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 259)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக் குறிப்பு: மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>E5/3725/2022 | |
| | 12. இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரி 1 ஜுலை 2017 முதல் அமல்படுத்தபட்ட நிலையில், அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தாரர்களால், திட்டநிதி மற்றும் பொது நிதியின் கீழ், மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான (construction, erection, commissioning, installation, completion, fitting out, repair, maintenance, renovation, or alteration) மதிப்பீட்டில் சரக்கு மற்றும் சேவை வரிக்கட்டணம் 12 சதவீதம் வழங்க தெரிவிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து , மத்திய அரசின் 13/07/2022 தேதியிட்ட அறிவிப்பு எண். 03/2022 –C.T (R) வெளியிடப்பட்டதை தொடர்ந்து, சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சில் கூட்டத்தின், 47 வது கவுன்சில் கூட்டத்தில், மேற்படி அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளினால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் மூலம் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தப்பணிகளின் மீதான சரக்கு மற்றும் சேவை வரியானது 12 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் எனவும், மேற்கண்ட உயர்த்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரியானது 18.07.2022 முதல் அமுல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 18.07.2022 முதல் இம்மாநகராட்சியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களால் பொதுநிதி மற்றும் திட்டநிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தப்பணிகளின் மதிப்பீடு மீதான சரக்கு மற்றும் சேவை வரியினை, பணிக்கான மதிப்பீட்டில் 12 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தி பட்டியல் தொகை வழங்கிடவும், மேலும் மேற்கண்ட அறிவிப்பு வெளியிடும் முன் தொடங்கப்பட்ட பணிக்கான பட்டியல் தொகையில் சரக்கு மற்றும் சேவை வரியினை 12 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தி 18.07.2022 முதல் வழங்கும் நேர்வில், அப்பணியின் மொத்த மதிப்பீடு தொகைக்கு உட்பட்டு வழங்கிடவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/3209/2015(W) | 260)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்:29.12.2022

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி